**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**இயல்பு கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 31-10-2023-ந் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை : திருமதி.பா. கவிதா, M.Com.,**

தலைவர்,

திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | **தீர்மானம் எண்** | **விபரம்** |
| **01** | நகராட்சி ஆணையர் அவர்களின் அக்டோபர்-2023 மாதத்திற் கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br><br>**<u>ந.க.எண்.77/2023/சி1</u>** | **182** | **அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது** |
| **02** | சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண்.32885/2022ல் திரு.J.S.அலி என்பவர், விழுப்புரம் நகராட்சியில் 30.09.2022 அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்று, அதற்கான ஓய்வு காலப் பணப்பயன்கள் நிறுத்தி வைத்துள்ளதை எதிர்த்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, விழுப்புரம் நகராட்சி ஆணையர், திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையர் மற்றும் மற்றவர்கள் (1 முதல் 6 நபர்கள்) ஆகியோர்களை பிரதி வாதியாக சேர்த்து வழக்கு தொடுத்து தீர்ப்பு பெறப்பட்டுள்ளது. அதில் தனியருக்கு 6% வட்டியுடன் பணப்பயன் வழங்க சென்னை உயர்நீதிமன்ற பேராணையில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, விழுப்புரம் நகராட்சியுடன் சேர்ந்து திருத்துறைப்பூண்டி நகராட்சியும் | **183** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | மேற்படி வழக்கின் தீர்ப்பினை எதிர்த்து (தணிக்கைப் பத்தி திருத்துறைப்பூண்டி நகராட்சியில் நிலுவையில் உள்ளதால்) சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில் இந்நகராட்சி சென்னை உயர்நீதிமன்ற அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.D.ரவிச்சந்தர் அவர்களை மேற்படி வழக்கின் தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு செய்து ஆஜராக கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி, மேற்படி வழக்கில் மேல்முறையீடு செய்ய வழக்கறிஞர் கட்டணம் ரூ.25000/- வழங்க கோரியுள்ளார். எனவே, வழக்கறிஞர் கட்டணம் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(**ந.க.எண். 3371/2022/சி1** | | |
| **03** | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் 16.09.2023ம் தேதிய காணொளி ஆய்வுக் கூட்ட அறிவுரையின்படி இந்நகராட்சிக்கு சொந்தமான வரியில்லா இனங்களில் தற்போது நடைமுறையில் உள்ள வரியில்லா இனங்களான மூன்றாண்டு குத்தகைகள் மற்றும் ஒன்பதாண்டு குத்தகை இனங்களில் முறையற்ற மற்றும் நீக்கம் செய்யப்பட வேண்டிய இனங்கள் குறித்து பட்டியல் பெறப்பட்டதில் இந்நகராட்சி கேட்பு நிலுவை பட்டியலுள்ள 34 இனங்களை தவிர 22 எண்ணிக்கை வேறுபாடாக உள்ளதை உரியவாறு குழு அமைத்து முறையாக உள்ள குத்தகை இனங்களை கண்டறிந்தும், முறையற்ற இனங்களை நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மேலாளர், வருவாய் ஆய்வாளர், வருவாய் உதவியாளர்கள் கள | **184** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | ஆய்வு செய்யப்பட்டதில் இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்கள் 4 எண்ணிக்கையும், ஒன்பதாண்டு குத்தகை இனங்கள் 30ம், ஆக 34 குத்தகை இனங்கள் முறையாக உள்ளது என்றும், மூன்றாண்டு குத்தகை இனம் 18 எண்ணிக்கையும் ஒன்பதாண்டு குத்தகை இனங்கள் 4 எண்ணிக்கையும் ஆக 22 எண்ணிக்கை இனங்கள் கேட்பு மற்றும் நிலுவை ஏதும் இல்லாமல் உள்ளதை UTIS மென்பொருளில் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | | |

**<u>நீக்கம் செய்யப்பட வேண்டிய மூன்றாண்டு குத்தகை இனங்கள்</u>**

| வ.எ. | வரியில்லா இனங்கள் எண், | நிறுவனத்தின் பெயர் | நிலை |
|---|---|---|---|
| **1** | **103/00001** | மீன் நாளங்காடி | இரட்டை பதிவு |
| **2** | **103/00002** | சாலையோர வசூல் | இரட்டை பதிவு |
| **3** | **52** | சாலையோர கடைகள் வசூல் | இரட்டை பதிவு |
| **4** | **103/00003** | விளம்பர தொலைக் காட்சிப் பெட்டி | இரட்டை பதிவு |
| **5** | **8** | 270 வசூல் | இரட்டை பதிவு |
| **6** | **2** | பேருந்துகள் கட்டணம் | தற்போது நடைமுறையில் இல்லை. |
| **7** | **21** | தினசரி மார்க்கட் வசூல் | இரட்டை பதிவு |
| **8** | **41** | தீயணைப்பு நிலையம் வாடகை | தற்போது நடைமுறையில் இல்லை. |
| **9** | **3** | மீன் மார்க்கட் | இரட்டை பதிவு |
| **10** | **36** | மீன் நாளங்காடி | இரட்டை பதிவு |

| | | | |
|---|---|---|---|
| **11** | **22** | புதிய பேருந்து நிலைய தொலைக்காட்சி விளம்பரம் | இரட்டை பதிவு |
| **12** | **23** | புதிய பேருந்து நிலைய தொலைக்காட்சி விளம்பரம் | இரட்டை பதிவு |
| **13** | **6** | புதிய பேருந்து நிலைய கட்டணம் கழிவறை வசூல் | தற்போது நடைமுறையில் இல்லை. |
| **14** | **5** | பழைய பேருந்து கட்டணம் கழிவறை வசூல் | தற்போது நடைமுறையில் இல்லை. |
| **15** | **4** | ஆடு அடிக்கும் தொட்டி | இரட்டை பதிவு |
| **16** | **37** | புதிய பேருந்து நிலைய தொலைக்காட்சி விளம்பரம் | இரட்டை பதிவு |
| **17** | **7** | திருக்குளம் வடகரை கட்டண கழிவறை | தற்போது நடைமுறையில் இல்லை. |
| **18** | **1** | காய்கறி மார்க்கட் | இரட்டை பதிவு |
| **<u>நீக்கம் செய்யப்பட வேண்டிய ஒன்பதாண்டு குத்தகை இனங்கள்</u>** | | | |
| 1 | 31 | புதிய பேருந்து நிலைய ஏ.சி.சீட் ஸ்டால் எண் 5 | இரட்டை பதிவு |
| 2 | 33 | புதிய பேருந்து நிலைய ஏ.சி.சீட் ஸ்டால் எண் 3 | இரட்டை பதிவு |
| 3 | 25 | புதிய பேருந்து நிலைய கடை எண் 5 ஏ.சி.சீட் | இரட்டை பதிவு |
| 4 | 28 | புதிய பேருந்து நிலைய ஏ.சி.சீட் ஸ்டால் எண் 2 | இரட்டை பதிவு |

| | | | |
|---|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**2.** கேட்பு வசூல் நிலுவைப்பட்டியலில் உள்ள வரியில்லா இனங்கள் 34 எண்ணிக்கை தவிர UTIS மென்பொருளில் 22 எண்ணிக்கை வேறுபாடாக உள்ளது. இதில் கேட்பு தொகை எழுப்பப்படாத காரணத்தால் இதில் நிதி இழப்பு ஏதுமில்லை என வருவாய் ஆய்வாளர் மற்றும் மேலாளரால் கள ஆய்வு செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் கேட்பிலிருந்து நீக்கம் செய்யலாம்.<br>**<u>ந.க.எண். 2796 /2023/அ2</u>** | | |
| **04** | நீர் நிலைகள் ஆக்கிரமிப்பு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் 29505/2018-ல் திரு.ஆர்.கே.ஐயப்பன், வழக்கறிஞர் என்பரால் இந்நகராட்சிக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் அரசு தலைப்பில் இந்நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை தள்ளுபடி செய்து பெற்ற சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.எஸ்.ஜே. முகமது சாதிக் அவர்கள், மேற்படி வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.20,000/- வழங்க கோரியுள்ளார். எனவே, மேற்படி வழக்கறிஞர் கட்டணம் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**<u>ந.க.எண் 3618/2018/எப்1</u>** | **185** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **05** | இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் இந்நக ராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் வாகனங்களுக்கு வாகன காப்பீடு காலம் 31.10.2023 உடன் முடிவடைவதால், 1.11.2023 முதல் வாகன காப்பீட்டினை புதுப்பிக்க The Oriental Insurance Company Limited நிறுவனத்திடமிருந்து புதுப்பித்தல் அறிவிப்பு வரப்பெற்றுள்ளது. எனவே, கீழ்க்கண்டுள்ள விவரப்படி வாகன காப்பீடு புதுப்பித்தல் கட்டணம் செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. | **186** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்.</th><th>வாகனம் எண்</th><th>காப்பீடு எண்</th><th>காப்பீடு புதுப்பித்தல் நாள்/காலம்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>TN-50—AT-8955</td><td>480600/31/2013/6538</td><td>01.11.2023 ஒரு வருடம்</td><td>25000/-</td></tr>
<tr><td>2.</td><td>TN-50—AT-5929</td><td>480600/31/2013/6538</td><td>01.11.2023 ஒரு வருடம்</td><td>25000/-</td></tr>
<tr><td></td><td>கூடுதல்</td><td></td><td></td><td>50000/-</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பொதுசுகாதாரப் பிரிவு அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.<br>
(ந.க.எண்.2801/2023/எச்1)
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>06</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ள 300 வீடுகளுக்கு ஒரு மஸ்தூர் என்ற விகிதத்தில் பணியாற்ற அனுமதி வரப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 7286 வீடுகளுக்கு 25 மஸ்தூர் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் The Karan Social Development Foundation , மன்னார்குடி என்ற நிறுவனத்தின் மூலம் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இந்நிலையில் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தக் காலம் 31.10.2023 உடன் முடிவடைவதால், பொதுசுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதியும் மேலும் இரண்டு மாதங்களுக்கு 01.11.2023 முதல் 31.12.2023 வரை ஒப்பந்தத்தினை கால</td>
<td>187</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | நீட்டிப்பு செய்துக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 1818/2020/எச்1** | | |
| **07** | இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் வாகனம் எண் த.நா.50-L-6073 TATA ACE-க்கான தகுதிச்சான்று முடிவடைந்துள்ளது எனவே, மேற்படி வாகனத்தின் தகுதிச் சான்று புதுப்பிக்க, பழுதுகள் நீக்கம் செய்ய வேண்டியுள்ளதால், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.60,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**(ந.க.எண்2800/2023/எச்1)** | **188** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **08** | இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பணியாற்றும் தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் தகுதியுடை கடைநிலை பணியாளர்களுக்கு 2023-24 ஆம் ஆண்டிக்கு சீருடைகள், தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் லிட்., கோயம்புத்தூர் என்ற நிறுவனத்தில் வாங்குவதற்கும், அதற்கான தையல் கூலி வழங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :**<br><br>**1.** மன்றம் அனுமதிக்கலாம். | **189** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **2.** மேற்படி செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(**<u>ந.க.எண். 2750/2023/எச்1</u>** | | |
| **09** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொதுநிதி 2023-2024ன்கீழ் வார்டு எண்.10ல் மீனாட்சி வாய்க்கால் சாலையில் புதிதாக ஒரு மோட்டார் அறை அமைத்து அந்த பகுதிக்கு தண்ணீர் வசதி செய்ய வேண்டும் என அப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கவும், அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படியும் மேற்படி இடத்தினை ஆய்வு செய்த நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையர் (மு.கூ.பொ) மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிவுரையின்படியும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.90 இலட்சத்திற்கு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :**<br><br>**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**2.** பொதுநிதியில்மேற்கொள்ளமன்றம்அனுமதிவழங்கலாம்.<br>**3.** நகர்மன்ற தலைவர் அவர்கள் 01.08.2023 அன்று முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுத்ததை மன்றம் அனுமதிக்கலாம்<br><br>(**<u>ந.க.எண். 2446/2023/இ1</u>** | **190** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>10</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொதுநிதி 2023-2024ன்கீழ் வார்டு எண்.10ல் மீனாட்சி வாய்க்கால் சாலையில் புதிதாக ஒரு மோட்டார் அறை அமைத்து அந்த பகுதிக்கு தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு 08.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரர் பெயர்<br>திருவாளர்கள்</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு</th><th>ஒப்பந்தப் புள்ளி தொகை</th><th>ஒப்பந்தப் புள்ளி சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1.</td><td>த.பவ்லா</td><td rowspan="2">153194.66</td><td>153038.60</td><td>0.10% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>எஸ்.பாலசுப்பிர மணியன்</td><td>154988.76</td><td>0.17% அதிகம்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.10% குறைவானதாக உள்ள திருமதி.த.பவ்லா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலக குறிப்பு :<br><br>
1. குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.த.பவ்லா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br><br>
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் 08.09.2023 அன்று முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்<br><br>
<u>ந.க.எண். 2446/2023/இ1</u>
</td>
<td>191</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **11** | இந்நகராட்சி 2022-23ஆம் ஆண்டிற்கான இறுதி இருப்புகள் ஆண்டு கணக்குடன் இணக்கம் செய்து ஐந்தொகை குறிப்பும் வருவாய் மற்றும் செலவுக் கணக்கும் பல்வேறு பதிவேடுகளுடன் இணக்கச்சான்று உரிய இணைப்புகளுடன் தயார் செய்து அளித்திட செலவுதொகை ரூ.35000/=க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** 2022-23ஆம் ஆண்டிற்கான வரவு மற்றும் செலவு கணக்கு முடிக்கப்பட்டுள்ளதற்கான செலவு தொகை திரு.ஜி.செல்வராசு, திருத்துறைப்பூண்டி அவர்களுக்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>(**ந.க.எண். 2885/2023/பி1** | **192** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **12** | இந்நகராட்சியில் 2021-2022ஆம் ஆண்டிற்கான தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தணிக்கை புத்தகம் தயார் செய்திட செலவு தொகை ரூ.3272/-ஆகும். தணிக்கை அறிக்கை தற்போது நகராட்சியில் பெறப்பட்டுள்ளது. செலவு தொகைக்கான அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>(**ந.க.எண். 2884/2023/பி1** | **193** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **13** | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.24470/2019/எம்ஏ2 நாள்.11.09.2023 கடிதத்தில் அறிஞர் அண்ணா பிறந்தநாளான செப்டம்பர்-15-ஆம் தேதியன்று இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் உள்ள 96 பகுதி சபா மற்றும் வார்டு குழு கூட்டம் நடத்திட தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க மேற்படி கூட்டம் நடத்திடுவதற்கான ப்ளக்ஸ் போர்டு தயாரிப்பதற்கான உத்தேச | **194** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>செலவினம் ரூ.7500-த்திற்கும் மேலும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்டுள்ள இரண்டு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு உள்ளது.<br>
<table>
<tr><th>வ.எ.</th><th>விலைப்புள்ளிதாரர் பெயர்/முகவரி</th><th>ப்ளக்ஸ் போர்டு (6x4) 24 எண்ணிக்கை விலை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>தமிழ் வீடியோஸ் ஸ்டுடியோ பிளக்ஸ், ஹபிப் காம்ப்ளக்ஸ், திருவாரூர் ரோடு, திருத்துறைப்பூண்டி</td><td>7200/–</td></tr>
<tr><td>2.</td><td>ஆர்.கே.பிளக்ஸ் பிரிண்டிங், திருவாரூர் ரோடு, திருத்துறைப்பூண்டி</td><td>8400/-</td></tr>
</table>
மேற்படி, வரப்பட்டுள்ள விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண் 1-ல் கண்டுள்ள தமிழ் வீடியோஸ் ஸ்டுடியோ பிளக்ஸ், ஹபிப் காம்ப்ளக்ஸ், திருவாரூர் ரோடு, திருத்துறைப்பூண்டி என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு :<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட இவ்வலுவலக தொடர் நடவடிக்கையினை மன்றம் ஏற்கலாம்.<br>
(<u>ந.க.எண். 2778/2022/எச்1</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>14</td>
<td>கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் செயலாக்கம் தொடர்பாக மாவட்ட ஆட்சியர், திருவாரூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26518/2023/க.ம.உ.தி நாள்.18.07.2023 இந்நகராட்சிக்கு 7 முகாம்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி முகாம்களில் பயனாளிகள் மற்றும் பணியாளர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பயனாளிகள்</td>
<td>195</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் அலுவலர்கள் அமர்வதற்கு இருக்கை இல்லாத முகாம்களுக்கு 05.08.2023 முதல் 21.08.2023 வரை 16 நாட்களுக்கு வாடகை அடிப்படையில் இருக்கை வசதி அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.35000-த்திற்கும், மேலும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்டுள்ள இரண்டு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு உள்ளது. | | |

| **வ.எ.** | **விலைப்புள்ளிதாரர் பெயர்/முகவரி** | **சேர் ஒன்றிற்கு நாள் ஒன்றுக்கான வாடகை ரூ.** |
|---|---|---|
| 1. | ஸ்ரீராகவேந்திரா வாடகை பாத்திர நிலையம் பந்தல் & டெக்ரேஷன், 27/9, தெற்கு இராமமடத்தெரு, திருத்துறைப்பூண்டி | 8.00/- |
| 2. | எஸ்.டி.பி.வாடகை பாத்திரக்கடை, தெற்கு வீதி, திருத்துறைப்பூண்டி | 10.00/- |

மேற்படி, வரப்பட்டுள்ள விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண் 1-ல் கண்டுள்ள ஸ்ரீராகவேந்திரா வாடகை பாத்திர நிலையம் பந்தல் & டெக்ரேஷன், 27/9, தெற்கு இராமமடத்தெரு, திருத்துறைப்பூண்டி என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

**1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட இவ்வலுவலக தொடர் நடவடிக்கையினை மன்றம் ஏற்கலாம்.

(**ந.க.எண். 2156/2023/எப்1**

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr>
<td>15</td>
<td>திருமதி.சாந்திதேவி க/பெ.ஆர்.அனில்குமார் (இறப்பு) 23/97, டி.எம்.சி ரோடு, திருத்துறைப்பூண்டி என்பவர் 30.01.2023 அன்று தனது கணவர் திரு.ஆர்.அனில்குமார் என்பவர் இறந்துவிட்டதால் அவர் பெயரில் திருத்துறைப்பூண்டி நகராட்சியில் உள்ள பேக்கரி தயாரிக்கும் இடம் ஆகியவற்றிற்கான உரிமத்தை (D&O TRADE) ரத்து செய்து வழங்க கோரியுள்ளார். எனவே, கீழ்கண்டுள்ள விவரப்படி உள்ள கடைக்கான உரிமத்தினை ரத்து செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வரிசை எண்</th><th>உரிமைதாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>உரிமம் எண் (D&O TRADE)</th></tr>
<tr><td>1.</td><td>ஆர்.அனில்குமார்<br>23/97, டி.எம்.சி ரோடு, திருத்துறைப்பூண்டி</td><td>103/2018/0000216</td></tr>
<tr><td>2.</td><td>ஆர்.அனில்குமார்<br>23/97, டி.எம்.சி ரோடு, திருத்துறைப்பூண்டி</td><td>2103/2018/0000012</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :<br>
1. திரு.ஆர்.அனில்குமார் என்பவர் இறந்துவிட்டதால் அவர் பெயரில் உள்ள கடை உரிமத்தினை (D&O TRADE) ரத்து செய்ய அனுமதிக்கலாம்.<br>
(<u>ந.க.எண்.2595/2023/எச்1</u>
</td>
<td>196</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **16** | 1998 ஆம் ஆண்டு இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 24 வருடங்கள் கடந்த நிலையில் இன்று வரை இந்நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக உள்ளது. அரசாணை (நிலை) எண் 10 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 23.01.2023-ன்படி ஆண்டு வருமானம் ரூ.6.00 கோடிக்கு மேல் ரூ.9.00 கோடிக்குள்ளாக இருக்க வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியின் ஆண்டு வருமானம் ரூ.6.00 கோடிக்கு மேல் ரூ.9.00 கோடிக்குள்ளாக இருப்பதால், இந்நகராட்சியினை முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்திடவும், மேலும் இந்நகராட்சியினை சுற்றியுள்ள ஐந்து கிராம ஊராட்சிகளை இணைத்து நகரத்தின் எல்லையினை விரிவு படுத்திடவும் அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்து அனுமதிக்கலாம்.<br>(**ந.க.எண்.4225/2017/எப்1** | **197** | **அலுவலக குறிப்பு பதிவு செய்து அனுமதிக்கப்படுகிறது.** |

ஓம்/பா.கவிதா,
தலைவர்,
திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்.

/உண்மை நகல்/

**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**இயல்பு கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 31-10-2023-ந் தேதி செவ்வாய் கிழமை காலை 12.00 மணிக்கு நகர்மன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை : திருமதி.பா. கவிதா, M.Com.,**

தலைவர்,

திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்

<table>
<tr><th rowspan="2">பொருள் எண்</th><th rowspan="2">பொருள்கள் விபரம்</th><th colspan="2">நகர்மன்றத் தீர்மானம்</th></tr>
<tr><th>தீர்மானம் எண்</th><th>விபரம்</th></tr>
<tr><td>01</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையம் அருகில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதிதாக தினசரி காய்கறி மார்க்கெட்டில் கட்டப்பட்டு வரும் கீழ்க்கண்ட கடைகளுக்கு ஒப்படைக்கும் நாள் முதல்( மூன்றாண்டு கால தொகுப்பு கால அளவில்) ஒன்பது ஆண்டுகள் வரை முன் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>தினசரி காய்கறி மார்க்கெட்டில் அமைக்கப்பட்டுள்ள கடைகளின் விபரம்</u>.<br><br>
<table>
<tr><th>வரிசை எண்</th><th>பொருளடக்கம்</th><th>எண்ணிக்கை</th></tr>
<tr><td>1.</td><td>காய்கறி கடைகள் (ஆர்.சி.சி)</td><td>28</td></tr>
<tr><td>2.</td><td>தரை காய்கறி கடைகள் (ஸ்டால்)</td><td>20</td></tr>
</table>
</td><td>198</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>3.</td><td>ஏ.டி.எம் அறை (ATM Room)</td><td>1</td></tr>
<tr><td>4.</td><td>உணவகம் (Canteen)</td><td>1</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u>:<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்கண்ட இனங்களுக்கான வைப்பு தொகை மற்றும் சொத்து மதிப்பு சான்று ஆகியவற்றை நிர்ணயம் செய்ய மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.<br>
(<u>ந.க.எண். 2540/2023/அ2</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>02</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2023-2024ன்கீழ் வார்டு எண்.5ல் புதிய பேருந்து நிலையம் நவீன முறையில் மேம்பாடு செய்யும் பணிக்கு 29.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு
<table>
<tr><td>வ. எண்</td><td>ஒப்பந்ததாரர்/ ஒப்பந்த நிறுவனத்தின் பெயர்</td><td>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு<br>ரூ.</td><td>ஒப்பந்தப் புள்ளி தொகை<br>ரூ.</td><td>ஒப்பந்த புள்ளி சதவீதம் குறைவு அதிகம்</td></tr>
<tr><td>1.</td><td>M/S.M.S.G.INFRA,<br>No.P.94, Karups Nagar,<br>Neelagiri Therku Thottam,<br>Thanjavur-613005.</td><td rowspan="2">5,77,56,889.57</td><td>5,76,55,124.66</td><td>0.18%<br>குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>S.M.Associates,<br>Contractor,<br>45,R.R.Nagar,</td><td>5,89,00,373.30</td><td>1.98%<br>அதிகம்</td></tr>
</table>
</td>
<td>199</td>
<td>அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>Pudukottai Road,<br>Thanjavur-613005.</td><td></td><td></td><td></td><td></td></tr>
</table>

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மதிப்பீட்டைவிட 0.18% குறைவானதாகவும் உள்ள M/S.M.S.G.INFRA, No.P.94, Karups Nagar, Neelagiri Therku Thottam, Thanjavur-613005 என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை ஆணை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:

1. குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S.M.S.G.INFRA,No.P.94, Karups Nagar, Neelagiri Therku Thottam, Thanjavur-613005 என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றதை மன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம்.

2. வேலை உத்தரவு வழங்கியதை பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

<u>ந.க.எண். 854/2023/இ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>03</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுதிட்டம் 2021-22ன்கீழ் வார்டு எண்.10 மேட்டுத் தெருவில் உள்ள திருக்குளத்தினை மேம்பாடு செய்யும்பணி நடைபெற்று வரும் நிலையில் திருக்குளத்தின் தென்கரையில் உள்ள மின் மாற்றியினை வேறு இடத்திற்கு மாற்றி அமைப்பதற்கான கட்டண தொகை ரூ.2,17,250/- இளமின்பொறியாளர்/ உதவி செயற் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், திருத்துறைப்பூண்டிக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>200</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு</u>**:<br>அலுவலக குறிப்பு: மன்றம்அனுமதிவழங்கலாம்.<br>**<u>ந.க..எண்.1583/2021/இ1</u>** | | |
| **04** | திருத்துறைப்பூண்டி நகராட்சி வார்டு எண்.22 முத்துப்பேட்டை ரோடு, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 2.50 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் முதன்மை நீர் உந்தும் குழாய் அமைக்கும் பணிக்கு மூலதன மான்யம் & இயக்குதல் மற்றும் பராமரித்தல் நிதி திட்டம் 2023-24ன்கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.21062/2023/SS2 நாள் 06.10.2023ன்படி ரூ.129.00 இலட்சத்திற்கு திட்ட நிதியின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மூலதன மான்யம் & இயக்குதல் மற்றும் பராமரித்தல் நிதி திட்டத்தின்கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணி திட்ட ஆலோசகர் மூலம் கட்டிட வடிவமைப்பு (Structural Design) மதிப்பீடு தொழில்நுட்ப அனுமதி பெற மதிப்பீட்டு விலைவிகிதத்தில் 1.44%+GST கோரியுள்ள (ரூ.1,80,000) மன்றத்தின் பார்வைக்கு.<br><br>அலுவலக குறிப்பு:<br>1. ரூ.1,80,000/- பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற் கொண்ட இவ்வலுவலக நடவடிக்கை மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**<u>ந.க.எண்.2157/2023,இ1</u>** | **201** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| **05** | திருத்துறைப்பூண்டி நகராட்சி வார்டு எண்.5ல் புதிய பேருந்து நிலையம் நவீன முறையில் மேம்பாடு செய்யும் பணிக்கு Total Station முறையில் Topography Survey செய்து வரைபடம் வழங்கியதற்கான கட்டணம் மற்றும் KNMT-யில் மேற்கொள்ளப்பட்ட திருக்குளம், வெட்டுக்குளம், தேளிக்குளம் அளவீட்டு கட்டணம் தொகை ரூ.63,130/- Step Land Survey Consultants, Puducherry என்ற நிறுவனத்திற்கு பொது நிதியில் வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>**கோ.எண் 1996/2023/இ1** | **202** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

ஓம்/பா.கவிதா,
தலைவர்,
திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்.

/உண்மை நகல்/